டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 29.10.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 110 | Madurai | Online Edition

# பசுமை ஹைட்ரஜன் : இந்தியாவின் தூய எரிசக்தி மாற்றத்தின் முக்கிய தூண்

புது தில்லி, அக்.28

இந்தியாவின் தூய எரிசக்தி மாற்றத்தில் பசுமை ஹைட்ரஜன் மிக முக்கியத் தூணாக உருவெடுத்து வருகிறது. புதுப்பிக்கத்தக்க வளங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட மின்சாரத்தைப் பயன்படுத்தி நீரிலிருந்து பிரித்தெடுக்கப்படும் பசுமை ஹைட்ரஜன், கார்பன் உமிழ்வைக் குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக அதிக வெப்பம், ரசாயன செயல்முறைகள் தேவைப்படும் உர உற்பத்தி, பெட்ரோலிய சுத்திகரிப்பு, இரும்பு & எஃகு தயாரிப்பு, கனரக போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து ஆகிய துறைகளில் கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்த இது சிறந்த தீர்வாக விளங்குகிறது.

2023 ஆகஸ்ட் மாதத்தில் மத்திய புதிய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ள வரையறையின்படி, ஒரு கிலோ ஹைட்ரஜன் உற்பத்திக்கு கார்பன் டை ஆக்சைடு உமிழ்வு இரண்டு கிலோவுக்கு மிகாமல் இருந்தால் மட்டுமே அது பசுமை ஹைட்ர ஜனாகக் கருதப்படுகிறது. 2023 ஜனவரியில் ரூ.19,744 கோடி மதிப்பீட்டில் தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. 2030-க்குள் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 5 மில்லியன் மெட்ரிக் டன் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி திறனை எட்டுவதை இந்த இயக்கம் முதன்மை இலக்காகக் கொண்டுள்ளது.

உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ரூ.17,490 கோடி நிதியுடன் செயல்படுத்தப்படும் மாற்றத்திற்கான உத்திசார் நடவடிக்கைகள் திட்டத்தின் கீழ், 15 நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு 3,000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மின்னாற்பகுப்பு உபகரணங்களை உற்பத்தி செய்வதற்கான ஊக்கத்தொகைகள் வழங்கப்பட்டு உள்ளன. 2026 பிப்ரவரி நிலவரப்படி சுமார் 8,000 டன் உற்பத்தித் திறன் கட்டமைப்பு செயல்பாட்டிற்கு வந்துள்ளதுடன், ஆண்டுக்கு 8,62,000 டன் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் திறனுக்கான ஊக்கத்தொகைகளும் வழங்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகம், குஜராத்தின் தீன் தயாள் துறைமுகம், ஒடிசாவின் பாரதீப் துறைமுகம் ஆகியவை முக்கிய பசுமை ஹைட்ரஜன் மையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும் 2026 ஜூலை 17 அன்று ஜிந்த்-சோனிபட் வழித்தடத்தில் இந்தியாவின் முதல் உள்நாட்டு ஹைட்ரஜன் ரயில் சேவை தொடங்கப்பட்டது. இந்த ரயிலின் இயக்கத்தின் போது நீராவியும் வெப்பமும் மட்டுமே உமிழப்படுகிறது.

மேலும், எஃகு துறையில் ஐந்து முன்னோடி திட்டங்களுக்கும், 70 ஹைட்ரஜன் வாகனங்களை இயக்க 12 திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தின் மூலம் ரூ.8 லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 6 லட்சத்திற்கும் மேற்பட்ட புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியின் மூலம் இறக்குமதி செய்யப்படும் புதைபடிவ எரிபொருட்களுக்கான செலவில் சுமார் ரூ.1 லட்சம் கோடி வரை மிச்சமாவதுடன், ஆண்டு தோறும் கிட்டத்தட்ட 50 மில்லியன் மெட்ரிக் டன் கார்பன் உமிழ்வு தவிர்க்கப்படும்.

இந்த முன்னெடுப்புகள் நாட்டின் எரிசக்திப் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, 2070-க்குள் நிகர பூஜ்ய உமிழ்வை எட்டவும், 2047க்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கவும் வலுவான அடித்தளத்தை அமைக்கின்றன.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மண் வள மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி




மதுரை, அக்.28

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரத்தில் சிலை மலைப்பட்டி பஞ்சாயத்துக்கு உட்பட்ட பாப்பையாபுரம் கிராமத்தில் 28.10.26 அன்று வேளாண்மை தொழில்நுட்ப மேலாண் முகமை திட்டத்தின் கீழ் மண்நல மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி நடத்தப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குனர் மா.விமலா கலந்து கொண்டு மத்திய மற்றும் மாநில திட்டங்கள் பற்றியும் மண்வள அட்டையில் பயன்கள் குறித்தும், பருத்தி மக்காச்சோளம் பயிறு வகை பயிர்களுக்கு உர அளவு பற்றியும் எடுத்துக் கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் உதயகுமார், பேசுகையில் மண் எடுக்கும் முறைகள், மண்வள அட்டை பயன்படுத்துதலின் நோக்கம் மற்றும் பயன்கள் நில சீரமைப்பு பற்றி விவசாயிகள் எடுத்து கூறி விவசாய அடையாள அட்டை பதிவு செய்யாத விவசாயிகள் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. கௌரவ நிதி உதவி திட்டம் பற்றி செறிவூட்டல் முகாம் நடத்தப்பட்டு அதனுடைய நிறைகுறைகள் பற்றி எடுத்துரைத்தார்.

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையை இணை பேராசிரியர் டாக்டர் கு.ஆனந்த், பேசுகையில் மண்ணினை வளப்படுத்தும் தன்மை பற்றியும் பசுந்தால் பசுந்தலை உரங்கள் பயன்படுத்துவதன் நோக்கங்கள் பற்றியும், இயற்கை வழியில் விவசாயம் செய்யும் வழிமுறைகள் பற்றியும் பஞ்சகாவியா தயார் செய்யும் முறைகள் பற்றியும், ஐந்திலை கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்படுத்துவதின் நோக்கம் பற்றி எடுத்துக் கூறினார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர் துர்கா, மாரிமுத்து பயிற்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ச.கணேச ராஜா நன்றி கூறினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் மேம்பாட்டிற்கான மூலக்கூறு இனப் பெருக்கம் என்ற தலைப்பில் செய்முறைப் பயிற்சி

கோயம்புத்தூர், அக்.28

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (TNAU) தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தொழில்நுட்ப மையத்தின் (CPMB & B) தாவர உயிரித் தொழில்நுட்பத் துறை சார்பில், பயிர் மேம்பாட்டிற்கான மூலக்கூறு இனப்பெருக்கம் என்ற தலைப்பிலான இரு நாள் செய்முறைப் பயிற்சி அக்டோபர் 28 மற்றும் 29 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.



தமிழ்நாடு, கர்நாடகா, ஹரியானா மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மொத்தம் 27 பேர் இப்பயிற்சியில் பங்கேற்று உள்ளனர். இவர்களில் SRM பல்கலைக்கழகம் மற்றும் NGP கலை மற்றும் அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த முதுநிலை மாணவர்கள், ஆசிரியர்கள், உயிரித்தொழில்நுட்பத் துறை மற்றும் ICAR தேசிய ஆர்க்கிட் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மற்றும் தனியார் விதை நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்குவர்.

தொடக்க விழாவில், தாவர உயிரித் தொழில்நுட்பத் துறைத் தலைவரும் பேராசிரியருமான முனைவர் இ.கோகிலாதேவி வரவேற்புரை வழங்கினார். கோயம்புத்தூர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (HC & RI) முதன்மையர் முனைவர் கே.வெங்கடேசன் சிறப்புரையாற்றினார்.

இப்பயிற்சியின் முக்கிய நோக்கம், மூலக்கூறு குறிப்பான்களின் அடிப்படைகள் மற்றும் நவீன தாவர இனப்பெருக்கத்தில் அவற்றின் பயன்பாடுகள் குறித்து பயிற்சியாளர்களுக்கு விளக்குவதாகும். வல்லுநர்களின் விரிவுரைகளுடன், பாலிமரேஸ் சங்கிலித் தொடர் வினை (PCR) தொழில்நுட்பம் மற்றும் மூலக்கூறு குறிப்பான் உதவியுடனான தேர்வு (Marker-Assisted Selection) ஆகியவற்றில்

செய்முறைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும், மரபணு இணைப்பு வரைபடம் உருவாக்குதல், பண்புக்கூறு சார்ந்த மரபணு இடங்களை (QTL) கண்டறிதல் மற்றும் மரபணு அளவிலான தொடர்பாய்வு (GWAS) போன்ற மேம்பட்ட மரபணுப் பகுப்பாய்வு முறைகள் குறித்தும், ICIM மற்றும் TASSEL போன்ற மென் பொருட்களைப் பயன்படுத்தியும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியின் மூலம் மூலக்கூறு இனப்பெருக்க நுட்பங்கள் குறித்த அறிவையும் செய்முறைத் திறன்களையும் மேம்படுத்தி, நவீன மரபணுத் தகவல் சார்ந்த அணுகுமுறைகளைப் பயிர் மேம் பாட்டில் பயன்படுத்துவதற்கான திறனை வளர்ப்பது நோக்கமாகும். இப்பயிற்சியை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர உயிரித் தொழில்நுட்பத் துறை இணைப்பேராசிரியர் முனைவர் எஸ்.கீதாஞ்சலி ஒருங்கிணைத்து நடத்துகிறார்.

# விளைநிலம் காப்போம் இயக்க விழிப்புணர்வு கூட்டம் நடந்தது




திருச்சி, அக்.28

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராணி உத்தரவுபடி, கூத்தூர் கிராமத்தில் கிராம சேவை மையத்தில் விளை நிலம் காப்போம் இயக்க விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. இதில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்பழகன் இயற்கை வேளாண்மை குறித்தும், பாரம்பரிய நெல் சாகுபடி குறித்தும் உரை ஆற்றினார். இந்த பகுதி வேளாண்மை உதவி அலுவலர் பார்த்திபன் நடப்பு ஆண்டில் உள்ள திட்டங்கள் குறித்தும் நுண்ணூட்ட கலவை மற்றும் உயிர் உரங்கள் பயன்கள் குறித்தும் உரை ஆற்றினார்.

மேலும் இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தரமான விதை தேர்வு பற்றியும் நெல் நேரடி விதைப்பு முறை பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். முன்னோடி விவசாயிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர். உதவி தொழில்நுட்ப மேலாளர் சரஸ்வதி நன்றி உரை ஆற்றினார்.

# கரும்பில் காய்ந்த இலைகளை அகற்றும் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு வேளாண் மாணவிகளின் விழிப்புணர்வு பயிற்சி



திருச்சி, அக்.28

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பூனாம்பாளையம் கிராமத்தில், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள், ஆ.அபிநயா, சி.தர்ஷினி, வி.இறை எழில், ஜெ.ஜெயபிரியா, ச.கலை யரசி, வெ.கவிரத்னா, பெ.மேகலா, ரா.முருகேஸ்வரி, யு.ரேவதி மற்றும் ம.செனட் வின்சி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ், தத்தமங்கலம் கிராம விவசாயிகளுக்கு கரும்பில் காய்ந்த இலைகளை அகற்றும் தொழில்நுட்பம் குறித்து விளக்கப்பட்டது. கரும்புப் பயிரில் காய்ந்த இலைகளை முறையாக அகற்றும் முறையே இலை அகற்றுதல் (Detrashing) எனப்படுகிறது, இதன் மூலம் வயலில் காய்ந்த இலைகள் தேங்குவது குறைவதுடன், கரும்புத் தோட்டத்தில் காற்றோட்டம் மேம்படவும், வயல் பராமரிப்பை எளிதாக்கவும் உதவுகிறது.

கரும்பின் பச்சை இலைகளைப் பாதிக்காமல், காய்ந்த மற்றும் தேவையற்ற கீழ் இலைகளை மட்டும் கவனமாக அகற்ற வேண்டும். இதற்குப் பொருத்தமான பாதுகாப்பான கருவி களைப் பயன்படுத்தி, இலைகளை வெட்டி, அகற்றப்பட்ட இலை களை வீணாக்காமல், உரம் தயாரித்தல் அல்லது உரிய முறையில் மறுபயன்பாடு செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். கரும்பின் வளர்ச்சி நிலை மற்றும் வயல் சூழ்நிலைக்கு ஏற்ப இலை அகற்றுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தச் செயல்விளக்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு கரும்புப் பயிர் பராமரிப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, நவீன வேளாண் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி வளங் களைச் சிறப்பாகப் பயன்படுத்துமாறு மாணவர்கள் விவசாயி களுக்கு எடுத்துரைத்தனர்.

# Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விதைப்பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

புதுக்கோட்டை, அக்.28

விவசாயிகள் இருப்பு வைத்துள்ள விதைக்கு வியல்களில் இருந்து விதை மாதிரிகளை எடுத்து புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள நம்பர் 30, இராமலிங்கம் தெரு, திருக்கோகர்ணம் என்ற முகவரியில் இயங்கி வரும் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி விதைப்பரிசோதனை செய்து விதைக்குவியலின் விதைத் தரங்களான புறத்தூய்மை, முளைப்புத்திறன், பிறரக கலவன் மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றை துல்லியமாக தெரிந்து கொண்டு விதைப்பு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விதைப்பரிசோதனையின் பயன்கள் :** விதைக்குவியலின் தரம் அறிவதால் விதையின் அளவு தெரிந்து விதைக்கலாம். விதைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விதை தரங்களை விதைகள் கொண்டு உள்ளனவா என அறிந்து கொள்ளலாம். விதை தரம் அறிந்து விதைப்பதால் நல்ல மகசூல் மற்றும் நல்ல வருவாய் கிடைக்கிறது. விவசாயிகளுக்கும், விதை விற்பனையாளர்களுக்கும் விதை உற்பத்தியாளர்களுக்கும் விதையின் உண்மையான தரத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் விதைப்பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது.

தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து கொண்டிருப்பதால் ஐப்பசி பட்டத்தில் நெல், சோளம் மற்றும் காய்கறிப் பயிர்களான கத்திரி, தக்காளி, வெங்காயம், வெண்டை, பாகல், புடல், செடி முருங்கை, பூசணி ஆகிய பயிர்கள் பயிரிட ஏற்ற தாகும். ஒவ்வொரு விவசாயியும் சாகுபடி செய்ய வாங்கும் விதை களையோ அல்லது தங்கள் கைவசம் உள்ள விதைகளையோ விதைப்பதற்கு முன் முளைப்புத்திறன் அறிய விதை மாதிரிகளை விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- மட்டும் ஆய்வு கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் ரகம் குவியல் எண் ஆகியவை குறித்த விபர சீட்டுடன் நெல் விதை 50 கிராம், சோளம் உளுந்து, பாசிப்பயறு 100 கிராம், மக்காச்சோளம், நிலக்கடலை 500 கிராம், எள், ராகி 25 கிராம், காய்கறிப் பயிர்களான கத்திரி, தக்காளி, மிளகாய் 10 கிராம் வெண்டை, சுரை, பரங்கி, பூசணி, வெள்ளரி 100 கிராம், பாகல், புடல், செடி முருங்கை 250 கிராம் வெங்காயம் 10 கிராம், ஆகிய அளவில் விதை மாதிரி எடுத்து தங்களது முழு முகவரி உடன் கூடிய கடிதத்துடன் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி விதை யின் முளைப்புத்திறன் அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெறவேண்டுமாறு விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் செ.சுமித்ராதேவி மற்றும் மா.செல்வம் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.

# விதை நேர்த்தி, சேமிப்பு முறைகளால் விதையின் தரத்தை மேம்படுத்துதல்

தர்மபுரி, அக்.28

விதை நேர்த்தி மற்றும் விதை சேமிப்பு முறைகளில் மூலம் விதைகளின் தரத்தை மேம்படுத்தி அதிக மகசூல் பெறமுடியும் என தர்மபுரி விதைப்பரிசோதனை அலுவலர், இரா.கிரிஜா, தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளதாவது, விவசாயத்திற்கு தேவையான இடுப்பொருட்களில் விதைகளை நேர்த்தி செய்வது முக்கியமானது ஆகும். இது முளைப்புத்திறனை மேம்படுத்துகிறது. அந்த வகையில், நுண்ணுயிர் உரமான அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போபாக்டீரியா ஆகியவற்றை பயன்படுத்துவதால், தழைச் சத்து, மணிச்சத்து மற்றும் வறட்சியை தாங்கும் தன்மை அதிகரிக்கும். சூடோமோனாஸ், பேசில்லஸ் போன்ற உயிரியல் கட்டுப்பாட்டு நுண்ணுயிரிகளை பயன்படுத்துவதால் விதை மற்றும் மண் மூலம் பரவக்கூடிய நோய்கள் கட்டுப்படுத்தப்படும். டிரைக்கோடெர்மா விரிடி வேர் அழுகல், வாடல் நோய்களை கட்டுப்படுத்தி வேர்களை பலப்படுத்துகிறது.

விதைகளை உரிய கோணிப்பைகள், சுத்தமான தீவன சாக்குகளில் சேகரிப்பதுடன், விதைகளை சேமிக்கும் கிடங்கு களை சுத்தமாக பராமரிக்க வேண்டும். குப்பை, தூசிகள், பூச்சி தாக்கப்பட்ட விதைகளை உடனுக்குடன் அகற்ற வேண்டும். விதைகளின் ஈரப்பதத்தை அந்தந்த பயிர்களின் விதைத் தன்மைக்கு ஏற்றவாறு உலர்த்தி சேமிக்க வேண்டும். விதை மூட்டைகளை தரையில் அடுக்காமல், சீரான காற்றோட்டத்துடன் கட்டைகளின் மேல் அடக்க வேண்டும். சுவரிலிருந்து ஒன்றரை அடி இடைவெளியும் ஒரு அடுக்கில் இருந்து மற்றொரு அடுக்குக்கு குறைந்தபட்சம் ஆறு அடி இடைவெளியும் விட்டு, 6–8 மூட்டைகளுக்கு மிகாமல் ஒன்றின்மேல் ஒன்று அடுக்கி வைக்க வேண்டும் தொடர்ந்து, எலிகளின் நடமாட்டத்தை தடுத்து, மாதம் ஒருமுறை விதை மாதிரிகளை பரிசோதிக்க வேண்டும். இவ்வாறு விதை நேர்த்தி மற்றும் விதை சேமிப்பு முறைகளை பயன்படுத்தி விதையின் தரத்தை மேம்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என தெரிவித்துள்ளார்.

# விளைநிலம் காப்போம் இயக்கம் 2026 : மண் வளத்தைப் பாதுகாக்க விவசாயிகளுக்கு விழிப்புணர்வு



விருதுநகர், அக்.28

இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் சார்பில், விளைநிலங்களின் வளத்தைப் பாதுகாத்து, நிலையான வேளாண்மையை ஊக்குவிக்கும் நோக்கில் கேத் பச்சாவோ அபியான் ராபி 2026 (Khet Bachao Abhiyan Rabi 2026) இயக்கம் நாடு முழுவதும் அக்டோபர் 22 முதல் நவம்பர் 30 வரை நடைபெறுகிறது.

இயக்கத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை அறிவியல் நிலையம், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம், சார்பில் விவசாயிகளுக்கு மண் வளப் பாதுகாப்பு மற்றும் சமச்சீர் உர மேலாண்மை குறித்த விழிப்புணர்வு அருப்புகோட்டை வட்டாரத்தில் உள்ள கோவிலாங் குளம் கிராமம் மற்றும் திருச்சுழி வட்டாரத்தில் உள்ள கத்தாலம்பட்டி கிராமத்தில் 23.10.26 அன்று ஏற்படுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் முனைவர் கிருஷ்ணகுமார், தொழில்நுட்ப வல்லுநர் (மண்ணியல் துறை) விவசாயிகள் தங்களது நிலத்தின் மண் மாதிரிகளை ஆய்வு செய்து, மண்வள அட்டையின் பரிந் துரைகளின் அடிப்படையில் பயிர்களுக்குத் தேவையான உரங் களைச் சரியான அளவில் பயன்படுத்த வேண்டும். மேலும் ரசாயன உரங்களைத் தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, இயற்கை உரங்கள், தொழு உரம், மண்புழு உரம், உயிர் உரங்கள் மற்றும் பசுந்தாள் உரப் பயிர்களைப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் வளத்தை மேம்படுத்தலாம் என்றும் விளக்கம் அளித்தார்.

பயிர் சுழற்சி முறையைப் பின்பற்றுதல், நீர் வளத்தைச் சிக்கன மாகப் பயன்படுத்துதல், மண்ணில் அங்ககப் பொருட்களின் அளவை அதிகரித்தல் மற்றும் பயிர்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களை ஒருங்கிணைந்த முறையில் வழங்குதல் ஆகிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் முனைவர் சம்பத்குமார் தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல் துறை) விளக்கம் அளித்தார்.

மண் வளத்தைப் பாதுகாப்பதன் மூலம் சாகுபடிச் செலவைக் குறைத்து, பயிர் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதுடன், எதிர்காலத்

தலைமுறைக்கும் வளமான விளைநிலங்களைப் பாதுகாத்து வழங்க முடியும் என வேளாண் விஞ்ஞானிகள் வலியுறுத்துகின்றனர். மண்ணைக் காப்போம்; விளைநிலத்தைப் பாதுகாப்போம்; நிலையான வேளாண்மையை வளர்ப்போம் என்ற நோக்கத்துடன் விவசாயிகள் இவ்வியக்கத்தில் பங்கேற்று, அறிவியல் சார்ந்த வேளாண் தொழில்நுட்பங்களைப் பின்பற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவாக அனைத்து விவசாய பெருமக்களுக்கும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கும் அதிகமான விவசாயிகள் பங்கேற்று பயன்பெற்றனர்.




# காற்றழுத்த தாழ்வுப் பகுதி எவ்வாறு புயலாக மாறுகிறது?

மழைக்காலங்களில் வானிலை ஆய்வு மையம் வெளியிடும் அறிவிப்புகளில், காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயல் உள்ளிட்ட வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு வார்த்தைக்கும் தனித் தனி அறிவியல் பொருளும் அளவீடும் எச்சரிக்கையாகயும் உள்ளன என்பது எத்தனை பேருக்கு தெரியும். அதைபற்றி விரிவாக பார்ப்போம்.




**காற்றழுத்த தாழ்வுப்பகுதி என்றால் என்ன?**

கடல்பகுதியை சுற்றியுள்ள இடங்களை விட குறைந்த காற்றழுத்தம் காணப்படும் அமைப்பு காற்றழுத்த தாழ்வு பகுதி எனப்படும். இத்தகைய அமைப்பால் கடல் பகுதியில் மேகங்கள் திரண்டு மழை பெய்ய க்கூடும். வளிமண்டல சூழல், கடல் வெப்ப நிலை, ஈரப்பதம் மற்றும் காற்றின் அமைப்பு ஆகியவை சாதகமாக இருந்தால், அந்த அமைப்பு மேலும் வலுப்பெறலாம். காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவான உடனே அது புயலாக மாறிவிடாது. சில அமைப்புகள் வலுப்பெறாமல், கரையை கடக்கலாம் அல்லது வலு விழக்கலாம். காற்றழுத்த அமைப்பு மேலும் வலுப்பெறும் போது அது நன்கு குறிக்கப்பட்ட காற்றழுத்த தாழ்வு பகுதியாகவும் பின்னர் காற்றழுத்த தாழ்வுமண்டலமாக மாறலாம்.

**இந்திய வானிலை ஆய்வு மையத்தின் வட இந்தியப் பெருங்கடல் வகைபாட்டின்படி?**

அதிக பட்சமாக நீடிக்கும் காற்றின் வேகம் மணிக்கு 31 முதல் 49 கி.மி வரை இருந்தால் அது காற்றழுத்த தாழ்வு மண்டலம் எனப் படுகிறது. காற்றின் வேகம் மணிக்கு 50 முதல் 61 வரை அதிகரித்தால் அது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் எனப்படும். இது வலுப்பெற்று மணிக்கு 62 கி.மி அல்லது அதற்கு மேல் நீடித்த காற்றின் வேகத்தை அடையும் போது அது புயல் வகைப்பட்டுக்குள் வரும்.

**புயலின் வகை?**

புயலின் தீவிரம் அதிக பட்சமாக நீடிக்கும் காற்று வேகத்தை அடிப்படையாக கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

புயல் – மணிக்கு காற்றின் வேகம் 62–88 கி.மீ

தீவிர புயல் – மணிக்கு 89–118 கிலோ மீட்டர்.

மிகத் தீவிர புயல் – மணிக்கு 119 முதல் 165கி.மீ வேகம்

அதி தீவிர புயல் – மணிக் கு221 கி.மீ மேல்

புயலின் காற்றின் வேகம் மட்டுமே அதன் பாதிப்பை தீர்மானிப்பதில்லை. புயல் கரையை கடக்கும் இடம், மழையின் அளவு, கடல் நீர்மட்டம் உயர்வு, கடல் அலைகள் மற்றும் மக்கள் வாசிக்கும் பகுதியில் ஏற்படும் தாக்கம் ஆகியவை தான் புயலின் பாதிப்பை நிர்ணயிக்கிறது.

**புயல் காற்று, காற்று திடுக்கு என்றால் என்ன?**

வானிலை அறிவிப்புகளில் பலத்த காற்று, புயல் காற்று, திடீர் பலத்த காற்று, காற்றுத் திடுக்கு போன்ற வார்த்தைகள் பயன் படுத்தப்படுகின்றன.

காற்றின் வேகம் தீடீரென குறுகிய நேரத்துல அதிகரிப்பது தான் காற்று திடுக்கு எனப்படும்.

புயலின் நீடித்த காற்றின் வேகமும் காற்று திடுக்கின் அதிகபட்ச வேகமும் ஒன்றல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

**மஞ்சள் ஆரஞ்சு சிவப்பு நிற எச்சரிக்கையின் அர்த்தம் என்ன?**

1) மஞ்சள் எச்சரிக்கை – விழிப்புடன் இருக்க வேண்டும்.

2) ஆரஞ்சு எச்சரிக்கை – பாதிப்புகளை எதிர் கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

3) சிவப்பு எச்சரிக்கை – கடுமையான வானிலை பாதிப்புகள் ஏற்படக்கூடியது. தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

4) பச்சை நிற எச்சரிக்கை – குறிப்பிட்ட அபாயத்துக்கான எச்சரிக்கை எதுவுமில்லை. பச்சை எச்சரிக்கை இருந்தால் மழை பெய்யாது என்பது அர்த்தமல்ல.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பில்லனகுப்பம் கிராமத்தில் விளைநிலம் காப்போம் சிறப்பு முகாம்

கிருஷ்ணகிரி, அக்.28

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறை சார்பில் பில்லனகுப்பம் கிராமத்தில் வேப்பனப்பள்ளி வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தொடங்கி விளைநிலம் காப்போம் குறித்து விளக்கம் அளித்தார்.

இந்த பயிற்சியின் போது, துணை வேளாண்மை அலுவலர் ராமநாதன், மண்ணின் வளத்தை இயற்கை முறையில் மேம்படுத்துவதில் பசுந்தாள் உர பயன்பாட்டின் முக்கியத்துவம், பயிர்களுக்கு தேவையான சத்துக்கள் சரியான விகிதத்தில் கிடைப்பதை உறுதி செய்யும், சமச்சீர் உர வேலாண்மை, நெல் பயிரில் விதை நேர்த்தி செய்வதன் நன்மைகள், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள், கோனோவீடர் மூலம் களை எடுத்தல், இயற்கை முறையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து விளக்கி கூறினார்.

மண் மாதிரி எடுத்தல் மற்றும் மண் ஆய்வு பரிந்துரையின் படி உரம் இடுதல், இயற்கை வேளாண்மை, உயிர் உர விதை நேர்த்தி செய்தல், தரமான வீரிய ரகங்களை தேர்வு செய்ய வேண்டும்.

விதைகளை உயிர் பூஞ்சானகொல்லி சூடோ மோனாஸ், உயிர் உரங்கள் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா அல்லுது 100மிலி திரவ உயிர் உரங்கள் தேவையான விதையுடன் ஆற வைத்த அரிசி கஞ்சி சேர்த்து நன்கு கலந்து விதை நேர்த்தி செய்யவும் மற்றும் சொட்டுநீர் பாசன திட்டத்தின் நன்மைகள் பற்றி தெளிவாக கூறினார். இந்த முகாமில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

அத்திமுகம் அதியமான் கல்லூரி மாணவர்கள் கலந்துக் கொண்டு விவசாயிகளுக்கு தொழில்நுட்பம் வழங்கப்பட்டது. அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் கவிதா அட்மா திட்ட செயல்பாடுகள் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பாரதிராஜா மற்றும் பிரியா உழவன் செயலியை பயன்படுத்தும் முறைகள் பற்றி விளக்கமளித்தார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மக்காச்சோள படைப்புழுவைக் கட்டுப்படுத்திட தொழில்நுட்ப ஆலோசனை

அரியலூர், அக்.28

மக்காச்சோளம் வணிக பயிர்களில் முக்கியமான தானியப் பயிராகும். அரியலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம் 16850 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மக்காச்சோளம் இளம்செடி, பூ மற்றும் கதிர் பிடிக்கும் பருவமென பல்வேறு நிலைகளில் உள்ளது. 25 முதல் 35 நாட்கள் உள்ள இளம்செடியில் படைப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. படைப்புழுக்களின் நடமாட்டத்தை கண்டறிய ஏக்கருக்கு 5 எண் இனக்கவர்ச்சி பொறி வைத்து, படைப்புழுக்களின் தாக்குதலுக்கு ஏற்ப பூச்சிக்கொல்லி தெளிக்கலாம்.

முதல் பூச்சிக்கொல்லி தெளிப்பாக விதைத்த 15 முதல் 25 நாளில் அசாடிரக்டின் 1 சதவீதம் இசி 20 மில்லி (Azadirachtin 1% EC) அல்லது தயோடிகார்ப் 20 கிராம் (Thiodicarb 75%WP) அல்லது இமாமெக்டின் பென்சோயேட் 4 கிராம் (Emamectin Benzoate 5% SG) 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

இரண்டாம் கட்ட தெளிப்பாக, விதைத்த 31 முதல் 45-வது நாளில் ஸ்பைனிடோரம் 11.7சதவீதம் எஸ்இ 5 மில்லி (Spinetoram -11.7% SC) அல்லது மெட்டாரைசியம் - 80 கிராம் (Metarhizium) அல்லது குளோரான் டிரானிலிபுரோல் - 4 மில்லி (Chlorantraniliprole 18.5% SC) அல்லது புளுபென்டமைட் - 4 மில்லி (Flubendiamide 20% WG) அல்லது நோவாலுஜுரான் 15 மில்லி (Novaluron 5.25 % SC) இவற்றில் ஏதாவது ஒன்றை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து குருத்துப் பகுதியில் உள் செல்லுமாறு தெளிக்க வேண்டும்.

அரை ஏக்கருக்கும் குறைவாக மக்காச்சோளம் பயிரிட்டுள்ள விவசாயிகள் மேற்கண்ட பூச்சிக்கொல்லியினை 1 லிட்டர் தண்ணீர் பாட்டிலில் கலவையை நிரப்பி மூடியின் மேல் பகுதியில் துளையிட்டு குருத்தில் உள் செல்லுமாறு தெளிக்க வேண்டும். மக்காச்சோளம் பயிர் கதிர் பிடிக்கும் பருவத்தில் இருப்பின் டிரோன் (Dron) மூலமாக மருந்தினை விரைவாக தெளிக்கலாம்.

மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தி படைப்புழுவின் தாக்குதலை வெகுவாக குறைத்து, மகசூல் இழப்பு ஏற்படாவண்ணம் தடுத்து எதிர்பார்க்கும் விளைச்சலை பெறலாம். மேற்கண்ட தொழில் நுட்பங்களை பயன்படுத்தி மக்காச்சோளத்தில் படைப்புழுவைக் கட்டுப்படுத்தி அதி கமகசூல் பெற மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# நானோ விழிப்புணர்வு முகாம்

திருப்பூர், அக்.28




திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டாரத்தில் உள்ள காரத்தொழுவு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் (PACCS) விவசாயிகள் விழிப்புணர்வு முகாம் நடை பெற்றது.

இம்முகாமில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். இந்நிகழ்வில், இப்கோ கள அலுவலர் சரவணன், இப்கோ நானோ உரங்களான நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி., உயிர் உரங்கள் மற்றும் சாகரிகா திரவ உரம் ஆகியவற்றின் நன்மைகள், பயன்பாட்டு முறைகள் மற்றும் பரிந்துரைகள் குறித்து விவசாயி களுக்கு விளக்கமளித்தார்.

மேலும், மக்காச்சோளப் பயிரின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் இப்கோ நானோ யூரியா மற்றும் நானோ டி.ஏ.பி. உரங்களின் முக்கியத்துவம் குறித்தும், தென்னை சாகுபடியில் சாகரிகா கடற்பாசி உரம் மற்றும் வேப்பம் புண்ணாக்கின் பயன்பாடுகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

நானோ உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உரச்செலவைக் குறைப்பதுடன், பயிர்கள் ஊட்டச் சத்துக்களைத் திறம்படப் பயன்படுத்துவதையும் மேம்படுத்த முடியும் என்பது குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். தொடர்ந்து, சங்கட் ஹரன் பீமா யோஜனா (Sankat Haran Bima Yojana) திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்படும் காப்பீட்டுப் பயன்கள் குறித்தும் விளக்கமளித்தார்.



# இலைவண்ண அட்டவணை மற்றும் சூரிய ஒளி விளக்குப் பொறி அமைத்தல் குறித்த செயல்விளக்கப் பயிற்சி



நாகப்பட்டினம், அக்.28

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் அமைந்துள்ள வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதி ஆண்டு மாணவிகள், தங்களது கிராமப்புற வேளாண் பணி அனுபவத் (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு இலை நிற அட்டவணை (Leaf Colour Chart – LCC) மற்றும் சூரிய ஒளி விளக்குப் பொறி (Solar Light Trap) அமைப்பது குறித்த நேரடி செயல்விளக்கப் பயிற்சியை வெற்றிகரமாக நடத்தினர். விவசாயிகள் சாகுபடிச் செலவைக் குறைத்து, தழைச்சத்து மேலாண்மை மற்றும் பூச்சித் தாக்குதலைத் திறம்படக் கட்டுப்படுத்தும் நோக்கில் இப்பயிற்சி அளிக்கப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக, நெற்பயிரின் இலை நிறத்தை LCC அட்டவணையுடன் ஒப்பிட்டு, பயிருக்குத் தேவையான தழைச்சத்தின் அளவைத் துல்லியமாகக் கண்டறிந்து உரமிடும் முறையை மாணவிகள் விளக்கினர். வயலின் பல்வேறு பகுதிகளில் உள்ள ஆரோக்கியமான நெற்பயிர்களில் முழுமையாக வளர்ந்த 10 இலைகளைத் தேர்ந்தெடுத்து, நேரடி சூரிய ஒளி படாத நிழலான பகுதியில் நின்று இலைகளின் பச்சை நிறத்தை LCC அட்டவணையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்றும், அட்டவணையில் 1 முதல் 3 வரையிலான நிற மதிப்புகள் பெறப்பட்டால் பரிந்துரைக்கப்பட்ட அளவின்படி யூரியா உரமிட வேண்டும் என்றும் விவசாயிகளுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டது. இதன் மூலம் தழைச்சத்து தேவையைத் துல்லியமாகக் கண்டறிந்து தேவையற்ற உரமிடுவதைத் தவிர்க்க முடியும்.

மேலும், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையின் (IPM) கீழ் நெல் தண்டு துளைப்பான் பூச்சிகளைக் கட்டுப்படுத்தச் சூரிய ஒளி சக்தி மூலம் இயங்கும் விளக்குப் பொறி அமைக்கும் முறை செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது. ஒரு ஹெக்டேர் நெல் வயலுக்கு 1 விளக்குப் பொறி என்ற விகிதத்தில் ஏற்ற இடம் தேர்வு செய்யப்பட்டு, பகல் நேரத்தில் சூரிய ஒளித் தகடு மூலம் மின்கலனில் சேமிக் கப்படும் மின்சாரத்தைக் கொண்டு இரவு நேரத்தில் LED விளக்கு

ஒளிரச் செய்யப்படுகிறது. விளக்கின் ஒளியால் ஈர்க்கப்படும் தண்டு துளைப்பான் அந்துப்பூச்சிகள், விளக்கின் கீழே வைக்கப்பட்டுள்ள தண்ணீர் மற்றும் மண்ணெண்ணெய் கலந்த தொட்டியில் விழுந்து சிக்கிக் கொள்வதால், பூச்சிகளின் நடமாட் டத்தை முன்கூட்டியே அறிந்து இரசாயனப் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைக்க முடியும் என எடுத்துரைக்கப்பட்டது. கீழவேளூர் வேளாண்மைக் கல்லூரி மாணவிகளின் இந்தச் செயல் விளக்கப் பயிற்சி தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகத் தெரிவித்த விவசாயிகள், இத்தகைய நவீனத் தொழில்நுட்பங்களை முறையே பின்பற்றுவதன் மூலம் சாகுபடிச் செலவைக் குறைத்து அதிக லாபம் ஈட்ட முடியும் என்று மகிழ்ச்சி தெரிவித்தனர்.




# வேளாண் விரிவாக்க மேம்பாட்டு மையத்திற்கு ஊரக வேளாண் பணி அனுபவத் திட்ட மாணவர்கள் களப்பயணம்



திருச்சி, அக்.28

ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சிராப்பள்ளி மாணவர்கள் வேளாண் விரிவாக்க மேம்பாட்டு மையத்திற்குக் களப்பயணம் மேற்கொண்டனர். இப்பயணத்தின் மூலம் பல்வேறு வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் விவசாயிகளுக்கான சேவைகள் குறித்து மாணவர்கள் செய்முறை அறிவைப் பெற்றனர். அப்பகுதியில் சாகுபடிக்குப் பரிந்துரைக்கப்படும் பல்வேறு நெல் இரகங்கள் குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. அவற்றின் பயிர்க்காலம், சிறப்புப் பண்புகள் மற்றும் சாகுபடிக்கு ஏற்ற தன்மைகள் குறித்த தகவல்களும் வழங்கப்பட்டன. மேலும், விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களைப் பாதுகாப்பாகச் சேமிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சேமிப்புக் கிடங்கு வசதிகள் குறித்து அலுவலர்கள் எடுத்துரைத்தனர். அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதில் சேமிப்புக் கிடங்குகளின் முக்கியத்துவம் குறித்தும் மாணவர்கள் அறிந்துகொண்டனர். நிலையான வேளாண்மைக்கு உதவும் பல்வேறு உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் மையத்தில் விளக்கப்பட்டது. குறிப்பாக, விவசாயி களுக்கு உயிர் உரங்கள் 50 சதவீத மானியத்தில் வழங்கப் படுவது குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இத்தகைய அரசு மானியத் திட்டங்கள் விவசாயிகளின் இடுபொருள் செலவைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண் முறைகளைப் பின்பற்ற உதவுவதாக அலுவலர்கள் விளக்கினர். இக்களப்பயணம் நெல் இரகங்கள், சேமிப்புக் கிடங்கு வசதிகள், உயிர் உரங்கள் மற்றும் விவசாயிகளுக்கான மானியத் திட்டங்கள் குறித்த மாணவர்களின் நடைமுறை அறிவை மேம்படுத்தும் பயனுள்ள அனுபவமாக அமைந்தது.

# இருள்நீக்கி நெல் அரவை ஆலையை பார்வையிட்ட RAWE மாணவிகள்



திருவாரூர், அக்.28

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், இருள்நீக்கி கிராமத்தில் செயல்பட்டு வரும் அக்ரோ ஃபுட்ஸ் அரிசி ஆலையில் (Agro Foods Rice Mill), நெல் அரவை மற்றும் அரிசி உற்பத்தி நடைமுறைகள் குறித்து கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு இளநிலை வேளாண் மாணவிகள் பார்வையிட்டனர். வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கீழ்வேளூர், நாகப்பட்டினம் மாணவிகள், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக இதை பார்வையிட்டனர்.

இந்த பார்வையின் போது, நெல் அரவை ஆலையின் செயல் பாடுகள், நெல்லைச் சேமித்தல், உலர்த்துதல், உமி நீக்குதல் மற்றும் அரிசியைத் தரம் பிரித்தல் போன்ற செயல்முறைகள் குறித்து மாணவிகள் அறிந்து கொண்டனர். மேலும், நெல்லின் ஈரப் பதத்தைப் பராமரித்தல், அரிசி உடைதலைக் குறைத்தல், அரிசியின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உற்பத்திக்குப் பிந்தைய இழப்பு களைக் குறைத்தல் போன்ற நடைமுறைகளின் முக்கியத்துவத் தையும் புரிந்து கொண்டனர். நெல் அறுவடைக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் முறையான உலர்த்துதல், சேமிப்பு மற்றும் அரவைச் செயல்முறைகள் மூலம் தரமான அரிசியைப் பெற முடியும். அரிசி உற்பத்தியுடன் கிடைக்கும் உமி, தவிடு போன்ற துணைப் பொருட்களையும் உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் கூடுதல் பொருளாதாரப் பயன்களைப் பெறலாம். மேலும், அரிசியின் தரம், பொதி செய்தல், சேமிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவை அரிசி ஆலைத் தொழிலில் முக்கியப் பங்கு வகிப்பதை மாணவிகள் அறிந்து கொண்டனர். இந்தக் களப்பயணத்தின் மூலம், நெல் சாகுபடிக்குப் பின்னர் நடைபெறும் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல் மற்றும் உணவு உற்பத்தித் தொழிலின் செயல் பாடுகள் குறித்த நடைமுறை அறிவை RAWE மாணவிகள் பெற்றனர்.

# மண்வளம் காப்போம் இயக்கம் – கேத் பச்சாவ் அபியான் விவசாயிகள் விழிப்புணர்வு முகாம்

விருதுநகர், அக்.28

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டாரம், குண்டலகுத்தூர் மற்றும் சிறுக்குளம் கிராமங்களில் மண்வளம் காப்போம்; தொடர்பான விவசாயிகள் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. வேளாண்மைத் துறையின் சார்பில் நடைபெற்ற இம்முகாமில் விருதுநகர் மாவட்ட மத்தியத் திட்டம் வேளாண்மை துணை இயக்குநர் நாச்சியார் அம்மாள் தலைமை வகித்துப் பேசினார். சாத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் முத்தையா முன்னிலை வகித்தார்.



இம்முகாமில் மாவட்ட மத்தியத் திட்டம் வேளாண்மை துணை இயக்குநர், இயற்கை பண்ணையம், இயற்கை பண்ணைய இடுபொருட்கள் உற்பத்தி செய்தல், பயிர் சாகுபடியில் பாரம்பரிய பயிர் விதைகளை பயன்படுத்துதல் குறித்து பேசினார். மேலும் விவசாயிகள் மண் வளத்தை மேம்படுத்த ஒவ்வொரு பயிர் சாகுபடி முறையின் முன்பு மண்ணை பரிசோதனை செய்தல், மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிடுதல், பசுந்தாள் உரங்களான தக்கைப் பூண்டு, சணப்பை, கொளுஞ்சி போன்றவற்றை பயிர் செய்து பூக்கும் தருணத்தில் நிலத்தில் உழவு செய்து மண்வளத்தை மேம்படுத்துதல் பற்றி கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் முனியாண்டி, நுண்ணீர் பாசனம் மானிய திட்டங்களை பற்றி கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நன்றி கூறினார். இம்முகாம் ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் செய்திருந்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

Rithvik Pipe

IS 4985 : 2021

IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW

isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID

BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பயறு வகைகளில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி




மயிலாடுதுறை, அக்.28

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார் கோவில் வட்டாரம், பரசலூர் கிராமத்தில் வேளாண்மைத் துறையின் அட்மா (ATMA) திட்டத்தின் கீழ், பயறு வகைகளில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை (ICM in Pulses) என்ற தலைப்பில் 28.10.26 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கு வேளாண்மைத் துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) செல்வராஜ், தலைமை தாங்கி, பயறு வகைகளில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மையின் முக்கியத்துவம், சாகுபடித் தொழில்நுட்பங்கள், பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்து மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை உள்ளிட்ட தொழில் நுட்பங்களைப் பின்பற்றுவதன் மூலம் மகசூலை அதிகரித்து, சாகுபடிச் செலவைக் குறைக்கலாம் என விளக்கினார்.

அதனைத் தொடர்ந்து, வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்குமார் வேளாண்மைத் துறையின் சார்பில் செயல் படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள், விவசாயிகளுக்கான நலத்திட்ட உதவிகள் மற்றும் வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும், விதைச் சான்று அலுவலர் கண்ணன், விதைச் சான்று பெறுவதற்கான நடைமுறைகள், தரமான விதை களைத் தேர்வு செய்வதன் அவசியம் மற்றும் விதை நேர்த்தி செய்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கினார். தரமான விதைகளைப் பயன்படுத்துவதும், விதை நேர்த்தி முறைகளைப் பின்பற்றுவதும் பயிர்களின் முளைப்புத் திறனை மேம்படுத்தி, ஆரோக்கியமான பயிர் வளர்ச்சிக்கு உதவும் என எடுத்துரைத்தார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மயில்வாகனம் செய்திருந்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் செல்வகுமாரன் நன்றி உரை வழங்கினார். இப்பயிற்சியில் பரசலூர் மற்றும் சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு, பயறு வகைகளில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொடர்பான தொழில்நுட்பத் தகவல்களைப் பெற்று பயன்பெற்றனர்.

# விவசாயம், உணவுப் பாதுகாப்பு மற்றும் மரங்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



சிவகங்கை, அக்.28

ஊரக வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நான்காம் ஆண்டு மாணவர்கள் தவமுகுந்தன், பிரதீப் குமார், இதய எல்சன், காமேஸ்வர், கோடீஸ்வர், சிவா ஆகியோர் மேலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு விவசாயம், உணவுப் பாதுகாப்பு மற்றும் மரங்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியின்கீழ், அன்றாட வாழ்வில் விவசாயத்தின் முக்கியத் துவம், பாதுகாப்பான மற்றும் சத்தான உணவை உட்கொள்வதன் அவசியம், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மரங்களின் பங்கு ஆகியவற்றை இளம் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

முதலில், விவசாயத்தின் முக்கியத்துவம் மற்றும் சமூகத்திற்குத் தேவையான உணவை உற்பத்தி செய்வதில் விவசாயிகளின் பங்கு குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. மேலும், பல்வேறு பயிர்கள் மற்றும் அடிப்படை வேளாண்மை நடைமுறைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. தொடர்ந்து, உணவுப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட்டது. பழங்கள் மற்றும் காய்கறிகளை உண்பதற்கு முன்பு நன்கு கழுவுதல், தனிநபர் சுகாதாரத்தைப் பேணுதல், புதிய மற்றும் சத்தான உணவுகளை உட்கொள்ளுதல், கெட்டுப்போன மற்றும் மாசுபட்ட உணவுகளைத் தவிர்த்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் விளக்கப்பட்டது. மேலும், ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களைப் பின்பற்றுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அடுத்ததாக, மரங்களின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மரங்கள் ஆக்சிஜனை வழங்குதல், காற்று மாசுபாட்டைக் குறைத்தல், நிழல் அளித்தல், மண் அரிப்பைத் தடுத்தல், நீர் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பறவைகள் உள்ளிட்ட உயிரினங்களுக்கு வாழிடமாகத் திகழ்தல் போன்ற பல்வேறு நன்மைகளை வழங்குகின்றன என்பது விளக்கப்பட்டது.

மேலும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அதிக மரங்களை நடுவதுடன், ஏற்கனவே உள்ள மரங்களையும் பாதுகாக்க வேண்டும் என மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியின் மூலம், பள்ளி மாணவர்கள் விவசாயம், உணவுப் பாதுகாப்பு, ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த அடிப்படை அறிவைப் பெற்றனர். மேலும், இந்நிகழ்வின் இறுதியில் பள்ளி நிர்வாகத்திற்கு மரக்கன்று பரிசளிக்கப்பட்டது.

இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சி, பள்ளி மாணவர்களிடையே விவசாயத்தின் மீதான ஆர்வத்தையும், ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களையும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொறுப்புணர்வையும் வளர்ப்பதற்கு உதவியாக அமைந்தது.

